பரிசுத்தமான புதிய மாபெரும் தேவ நகரம், புதிதாக உருவாக்கப்பட்ட பூமியில் வந்து இறங்கும். அங்கு நாம் அனைவரும் அவருடன் என்றென்றும் அளவற்ற மகிழ்ச்சியுடன் வாழ்வோம்! (வெளிப்படுத்துதல் 21, 22).

இதுவே நமது மகிழ்ச்சியான முடிவு. உங்கள் எதிர்காலத்தையும் இந்த முடிவுக்கு ஏற்ப சிறந்ததாக மாற்றலாம். இன்றே உங்கள் வாழ்விலும் இதயத்திலும் வந்து வசிக்க, இயேசுவை நீங்கள் அழைக்கலாம். அவர் உங்கள் அழைப்பிற்கு நிச்சயமாக பதிலளிப்பார். அவருடைய பிரசன்னம் மற்றும் அன்பினால் நீங்கள் இன்று முதல் நித்தியம் வரை ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

இந்த ஜெபத்தை நீங்கள் முழு மனதுடன் ஜெபியுங்கள்: "அன்புள்ள இயேசுவே, நீர் எனக்காக மரித்தீர்கள். நீர் என்னை நேசிப்பதை நான் அறிவேன். உமது பிரசன்னம் என்றும் எனக்குத் தேவை. என் இதயக்கதவை திறந்து உங்களை உள்ளே வருமாறு கேட்டுக் கொள்கிறேன். நான் செய்த பாவங்களை மன்னியுங்கள். உங்கள் நித்திய ஜீவன் எனும் இலவச பரிசுக்கு நன்றி. என் எல்லா பாவங்களையும் மன்னித்ததற்காகவும் நன்றி. உம்மை நேசிக்கவும், உமது அன்பையும் உண்மையையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள எனக்கு உதவுங்கள்." ஆமென்.

© 2022 Activated
மேலும் அறிய: https://activated.org/en.




பரிசுத்தமான புதிய மாபெரும் தேவ நகரம், புதிதாக உருவாக்கப்பட்ட பூமியில் வந்து இறங்கும். அங்கு நாம் அனைவரும் அவருடன் என்றென்றும் அளவற்ற மகிழ்ச்சியுடன் வாழ்வோம்! (வெளிப்படுத்துதல் 21, 22).

இதுவே நமது மகிழ்ச்சியான முடிவு. உங்கள் எதிர்காலத்தையும் இந்த முடிவுக்கு ஏற்ப சிறந்ததாக மாற்றலாம். இன்றே உங்கள் வாழ்விலும் இதயத்திலும் வந்து வசிக்க, இயேசுவை நீங்கள் அழைக்கலாம். அவர் உங்கள் அழைப்பிற்கு நிச்சயமாக பதிலளிப்பார். அவருடைய பிரசன்னம் மற்றும் அன்பினால் நீங்கள் இன்று முதல் நித்தியம் வரை ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

இந்த ஜெபத்தை நீங்கள் முழு மனதுடன் ஜெபியுங்கள்: "அன்புள்ள இயேசுவே, நீர் எனக்காக மரித்தீர்கள். நீர் என்னை நேசிப்பதை நான் அறிவேன். உமது பிரசன்னம் என்றும் எனக்குத் தேவை. என் இதயக்கதவை திறந்து உங்களை உள்ளே வருமாறு கேட்டுக் கொள்கிறேன். நான் செய்த பாவங்களை மன்னியுங்கள். உங்கள் நித்திய ஜீவன் எனும் இலவச பரிசுக்கு நன்றி. என் எல்லா பாவங்களையும் மன்னித்ததற்காகவும் நன்றி. உம்மை நேசிக்கவும், உமது அன்பையும் உண்மையையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள எனக்கு உதவுங்கள்." ஆமென்.

© 2022 Activated
மேலும் அறிய: https://activated.org/en.



ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு கடவுளுடைய தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்ட எதிர்காலத்தைப் பற்றிய பல தீர்க்கதரிசனங்களும் கணிப்புகளும் வேதாகமத்தில் நிரம்பியுள்ளன. உலகின் நிலைமை மற்றும் நம் உலகில் நடக்கும் நிகழ்வுகளை துல்லியமாக இந்த தீர்க்கதரிசனங்கள் விவரிக்கும்! “இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் அவர் பூமியில் ஸ்தாபிக்கப்போகும் ராஜ்யத்திற்கும் முந்தைய மனித வரலாற்றின் காலக்கட்டத்தை குறிக்கும் கடைசி நாட்கள்” என்று வேதாகமம் குறிப்பிடும் அக்காலக்கட்டத்தில் நாம் இப்போது வாழ்கிறோம்.

அந்திக்கிறிஸ்து எனப்படும் சர்வாதிகாரியால் கடைசி நாட்களின் முடிவில் சக்தி வாய்ந்த “ ஓர் உலக அரசாங்கம்” எழும் என்று நம்மை எச்சரிக்கிறது வேதாகமம்! அந்திக்கிறிஸ்துவானவன், உலக மக்கள் அனைவரையும் தன்னை வணங்கும்படி கட்டாயப் படுத்துவான். (2 தெசலோனிக்கேயர் 2 ம் அத்தியாயம்) இயேசு கிறிஸ்துவை நிராகரித்த, இந்த கொடியோனை நம்பிய மக்கள், அவனால் ஏமாற்றப்பட்டு, அவர்களின் வலது கையில் அல்லது நெற்றியில் ஒரு "முத்திரை" கொடுக்கப்படுவார்கள். இந்த குறி அல்லது எண் இல்லாமல், யாரும் வாங்கவோ அன்றி விற்கவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள். அந்த எண் “666“ என்று வேதாகமம் சொல்கிறது. அந்திக்கிறிஸ்துவின் ஏழு ஆண்டுகால ஆட்சி, உலகம் இதுவரை கண்டிராத கொடுமை வாய்ந்ததாக, மோசமானதாக இருக்கும்! (வெளிப்படுத்துதல் 13 மற்றும் மத்தேயு 24 ஐப் பார்க்கவும்.)

ஆனாலும் உலக வரலாற்றின் இந்த இருண்ட இரவில், பிரகாசமான விடியல் ஒன்று நம்மிடையே தோன்றும்! அந்திக்கிறிஸ்துவின் கொடுங்கோலாட்சியின் முடிவில், இயேசு கிறிஸ்து "வானத்தில் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் மேகங்களின் மேல் உட்கார்ந்து வருவார்” (மத்தேயு 24:29-31; 1 கொரிந்தியர் 15:51-52; வெளிப்படுத்துதல் 14:14-16).

அப்போது ஏற்கனவே மரித்த கிறிஸ்தவர்கள் முதலாவதாக, “யாரும் அழிக்க முடியாத, உயிர்த்தெழுந்த உடல்களைப் பெற்று” அவர்களின் கல்லறைகளிலிருந்து எழுந்திருப்பார்கள். பூமியில் இன்னும் உயிருடன் இருக்கும் நாமும், என்றும் அழியாத புத்துடல்களைப் பெறுவோம். பின்னர் நாம் அனைவரும் கர்த்தரை ஆகாயத்தில் சந்திக்க எடுத்துக் கொள்ளப் படுவோம்” (1 தெசலோனிக்கேயர் 4:14-17).

நாம் அனைவரும் பரலோகத்தில் ஒன்றுபட்ட பிறகு, கிறிஸ்துவும், அவரைச் சார்ந்தவர்களும் அர்மகெதோன் போரில், அந்திக்கிறிஸ்துவின் தீய சக்திகளை தோற்கடிக்க பூமிக்குத் திரும்புவார்கள். பின்னர் இயேசுவும் அவருடைய உயிர்த்தெழுந்த பிள்ளைகளும் இவ்வுலகை, உண்மை,மற்றும் நீதியுடன் ஒழுங்கமைத்து ஆட்சி செய்வார்கள் - பூமியில் கடவுளுடைய இராஜ்யம் அமையும்! (வெளிப்படுத்துதல் 20:4).

பூமியில் கிறிஸ்துவின் இந்த அற்புதமான ஆட்சியின் ஆயிரம் ஆண்டுகள் நடக்கும். பிறகு, கடவுளின்

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு கடவுளுடைய தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்ட எதிர்காலத்தைப் பற்றிய பல தீர்க்கதரிசனங்களும் கணிப்புகளும் வேதாகமத்தில் நிரம்பியுள்ளன. உலகின் நிலைமை மற்றும் நம் உலகில் நடக்கும் நிகழ்வுகளை துல்லியமாக இந்த தீர்க்கதரிசனங்கள் விவரிக்கும்! “இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் அவர் பூமியில் ஸ்தாபிக்கப்போகும் ராஜ்யத்திற்கும் முந்தைய மனித வரலாற்றின் காலக்கட்டத்தை குறிக்கும் கடைசி நாட்கள்” என்று வேதாகமம் குறிப்பிடும் அக்காலக்கட்டத்தில் நாம் இப்போது வாழ்கிறோம்.

அந்திக்கிறிஸ்து எனப்படும் சர்வாதிகாரியால் கடைசி நாட்களின் முடிவில் சக்தி வாய்ந்த “ ஓர் உலக அரசாங்கம்” எழும் என்று நம்மை எச்சரிக்கிறது வேதாகமம்! அந்திக்கிறிஸ்துவானவன், உலக மக்கள் அனைவரையும் தன்னை வணங்கும்படி கட்டாயப் படுத்துவான். (2 தெசலோனிக்கேயர் 2 ம் அத்தியாயம்) இயேசு கிறிஸ்துவை நிராகரித்த, இந்த கொடியோனை நம்பிய மக்கள், அவனால் ஏமாற்றப்பட்டு, அவர்களின் வலது கையில் அல்லது நெற்றியில் ஒரு "முத்திரை" கொடுக்கப்படுவார்கள். இந்த குறி அல்லது எண் இல்லாமல், யாரும் வாங்கவோ அன்றி விற்கவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள். அந்த எண் “666“ என்று வேதாகமம் சொல்கிறது. அந்திக்கிறிஸ்துவின் ஏழு ஆண்டுகால ஆட்சி, உலகம் இதுவரை கண்டிராத கொடுமை வாய்ந்ததாக, மோசமானதாக இருக்கும்! (வெளிப்படுத்துதல் 13 மற்றும் மத்தேயு 24 ஐப் பார்க்கவும்.)

ஆனாலும் உலக வரலாற்றின் இந்த இருண்ட இரவில், பிரகாசமான விடியல் ஒன்று நம்மிடையே தோன்றும்! அந்திக்கிறிஸ்துவின் கொடுங்கோலாட்சியின் முடிவில், இயேசு கிறிஸ்து "வானத்தில் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் மேகங்களின் மேல் உட்கார்ந்து வருவார்” (மத்தேயு 24:29-31; 1 கொரிந்தியர் 15:51-52; வெளிப்படுத்துதல் 14:14-16).

அப்போது ஏற்கனவே மரித்த கிறிஸ்தவர்கள் முதலாவதாக, “யாரும் அழிக்க முடியாத, உயிர்த்தெழுந்த உடல்களைப் பெற்று” அவர்களின் கல்லறைகளிலிருந்து எழுந்திருப்பார்கள். பூமியில் இன்னும் உயிருடன் இருக்கும் நாமும், என்றும் அழியாத புத்துடல்களைப் பெறுவோம். பின்னர் நாம் அனைவரும் கர்த்தரை ஆகாயத்தில் சந்திக்க எடுத்துக் கொள்ளப் படுவோம்” (1 தெசலோனிக்கேயர் 4:14-17).

நாம் அனைவரும் பரலோகத்தில் ஒன்றுபட்ட பிறகு, கிறிஸ்துவும், அவரைச் சார்ந்தவர்களும் அர்மகெதோன் போரில், அந்திக்கிறிஸ்துவின் தீய சக்திகளை தோற்கடிக்க பூமிக்குத் திரும்புவார்கள். பின்னர் இயேசுவும் அவருடைய உயிர்த்தெழுந்த பிள்ளைகளும் இவ்வுலகை, உண்மை,மற்றும் நீதியுடன் ஒழுங்கமைத்து ஆட்சி செய்வார்கள் - பூமியில் கடவுளுடைய இராஜ்யம் அமையும்! (வெளிப்படுத்துதல் 20:4).

பூமியில் கிறிஸ்துவின் இந்த அற்புதமான ஆட்சியின் ஆயிரம் ஆண்டுகள் நடக்கும். பிறகு, கடவுளின்